


தமிழ்நாட்டைவஞ்சித்தபா.ஜ.க.ஒன்றிய அரசைக்கண்டித்துகோவைசிவானந்தாகாலனி, டாடாபாத் மைதானத்தில், ஒருங்கிணைந்தகோவை மாவட்ட திமுக சார்பில்,மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி,தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் முன்னிலையில், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் எம்பி., தலைமையில்,மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக சொத்துப்பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி,கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன்,அருண்குமார் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ்,கல்பனா செந்தில்,அசோக் ஆறுக்குட்டி, MN.செந்தில்,ஜெயந்தி, பொருளாளர்கள் எஸ்.எம்.பி.முருகன், பெருந்திரளாக 5,000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கி தராத ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு, வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் முன்னிலையில் ஈரோடு மாநகரத்தில் மாபெரும்கண்டனஆர்ப்பாட்டம்நடைபெற்றது. ஆர்பாட்டத்தின்இறுதியில்மாநகரகழகசெயலாளர்மு.சுப்பிரமணியம்நன்றியுரையாற்றினார். ஆர்பாட்டத்தில் ஈரோடு தெற்கு, வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பார்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.




ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசை கண்டித்து விழுப்புரம் தெற்கு மாவட்டம் ( ம ) விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் டாக்டர் கனிமொழி என்.வி.என்..சோமு எம்.பி. கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் சிவா, நாடாளுமன்ற மன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் தேன்மொழி, விழுப்புரம் வடக்கு மாவட்ட நிர்வாகிகள். மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், சேதுநாதன், சீத்தாபதி சொக்கலிங்கம் மாவட்ட பொருளாளர் என்.ரமணன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் அருணகிரி , ரவிக்குமார் , அமுதா ரவிக்குமார், இளைஞர் அணி அமைப்பாளர்கள் செ.தினகரன், கண்ணன் ஆனந்த் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.



நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காத பாசிச பா.ஜ.க.வை கண்டித்து நாகை அபிராமி அம்மன் திருவாசல் அருகே நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் முன்னிலையிலும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கடலூர் புகழேந்தி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு திருமயத்தில் கலைஞர் நூலகத்தை புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் இளையராஜா திறந்து வைத்தார். இந்நிகழ்வுகளில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இரா. தமிழ் ராசு, அருண் சேகர், இளையராஜா, கவிக்குமார், நசுருதீன், முகம்மது ரபீக், ஒன்றிய செயலாளர்கள் ஆறு.சிதம்பரம், இரா.கணேசன், வி.ஆர்.இளையராஜா, அ.முத்து, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மேகநாதன், கே.ஆர். ராமசாமி மற்றும் சீமானூர் கணேசன், ராஜமாணிக்கம் உள்ளிட்ட திருமயம் வடக்கு, தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நமது தேசியக் கொடியை இறக்குமதி செய்ய முடியுமா?

## டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 29-
சீனாவில் இருந்து இயந்திரங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் இறக்குமதி செய்ய தடை செய்யப்பட்டிருக்கிறதா? மற்ற பொருட்களை எவ்வளவு மதிப்பிற்கு சீனாவிலிருந்து இறக்குமதி செய்கிறோம்? எந்த நாட்டிலிருந்தும் இதையெல்லாம் இறக்குமதி செய்யக் கூடாது என்று தடை செய்யப்பட்ட பொருட்கள் உண்டா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா அளித்த பதில் வருமாறு:-

சீனா மற்றும் தைவானில் இருந்து எந்தப் பொருட்களையும் இறக்குமதி செய்யக்கூடாது என்று எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. நம் நாட்டின் தொழில் மற்றும் வர்த்தகத்திற்கு எவையெல்லாம் தேவையோ அதை இந்நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொள்ள எந்தத் தடையும்



இல்லை.

கடந்த 2023-24-ஆம் நிதியாண்டில் சீனாவில் இருந்து மட்டும் 8.42 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு பொருட்களை இறக்குமதி செய்திருக்கிறோம். இது இந்தியாவின் மொத்த இறக்குமதியில் 15 சதவீதமாகும்.

எதையெல்லாம் இறக்குமதி செய்யலாம் என்று கேள்வி வரும்போது, கட்டுப்படுத்தப்பட்டவை, தடை செய்யப்பட்டவை என இரண்டு வகை இருக்கிறது. கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை உரிய அதிகார அமைப்புகளிடம் இருந்து உத்தரவு அல்லது அனுமதி பெற்ற பின்பே இறக்குமதி செய்ய வேண்டும்.

தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பொருட்களை உலகின் எந்த நாடுகளில் இருந்தும் எந்தச் சூழலிலும் இறக்குமதி செய்ய முடியாது.

அந்த வகையில், பிரதானமாக நமது நாட்டின் தேசியக் கொடி இருக்கிறது. எந்த அளவானாலும், மூன்று மடங்கு நீளம், இரண்டு மடங்கு உயரம் அல்லது அகலம் கொண்டதாகவும், செவ்வக வடிவிலும் இருக்க வேண்டும், குறைந்த பட்ச அழகு ஒப்பனை செய்யப்பட்டதாக தேசியக் கொடி இருக்க வேண்டும் என்ற அடிப்படை விதிகளை கடைபிடிக்காமல் தயாரிக்கப்படும் தேசியக் கொடியை எங்கிருந்தும் இறக்குமதி செய்ய முடியாது.

வாடகைத் தாய் மற்றும் செயற்கை கருத்தரிப்பு தொடர்பான சட்டங்களின்படி கருமுட்டை மற்றும் இனப்பெருக்க செல்களை எங்கிருந்தும் இறக்குமதி செய்ய முடியாது.

எலெக்ட்ரானிக் சிகரெட் உட்பட அதே போன்று செயற்கை புகையை உண்டாக்கும் எந்த சாதனத்தையும் இறக்குமதி செய்ய முடியாது. அதேபோல, ஜன்னலிலோ மேற்கூரையிலோ பொருத்துவது உட்பட எந்த மாதிரியான குளிர்சாதன இயந்திரங்களையும் இறக்குமதி செய்ய முழுமையான தடை இருக்கிறது.

ஆளில்லாத விமானங்களையும் எந்த நாட்டிலிருந்தும் எவரும் இறக்குமதி செய்ய முடியாது.

ஆனால், கால மாற்றத்திற்கேற்பவும், நாடுகளுக்கிடையே பரஸ்பர வர்த்தகத்தை ஊக்குவிக்கவும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் பட்டியல் அவ்வப்போது திருத்தப்பட்டு எளிதில் சில பொருட்களை இறக்குமதி செய்ய ஒன்றிய அரசு அவ்வப்போது மாற்றங்களைச் செய்கிறது.

அந்த வகையில் கடந்த ஐந்தாண்டுகளில், பாமாயில் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பொருட்கள், வெள்ளி போன்றவற்றை எளிதாக இறக்குமதி செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஜிதின் பிரசாதா தெரிவித்தார்.

### மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்!

# புதுக்கோட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம்! 5 ஆயிரம் கழகத்தினர் கண்டன முழக்கம்!

## முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் கண்டன உரை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் - டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை ஜூலை.29-

தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் பாஜக ஒன்றிய அரசை கண்டித்து 27ஆம் தேதி சனிக்கிழமை புதுக்கோட்டை வடக்கு மற்றும் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக சார்பில் புதுக்கோட்டை திலகர் திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் கண்டன உரையாற்றினார்.

இதில் கழகத்தினர் பெரும் திரளாக அலைகடலென திரண்டு வந்து பங்கேற்றனர். நிகழ்வுகளில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா, எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், மிசா சி.ராமநாதன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, கே.ஆர்.என். போஸ், அரு.வீரமணி, அழ.சுப்பிரமணியன், க.மதியழகன், பி. ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, எம். லியாகத் அலி, அபுதாஹீர், ஆ.செந்தில், சு.சண்முகம், ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா. ஆனந்த், எஸ்.ஜெயராமன், தென்னலூர் எம். பழனியப்பன், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், சி.ஆர்.வி. சித்ரா, எம்.செந்தில் குமார், ஆர்.வி.செல்வம், கலைவாணி சுப்பிரமணியன், என். வீரய்யா, ஆர்.செல்லத்துரை. த. மணிராஜன், க.ராஜேந்திரன், கே.எஸ்.சந்திரன், மு.க. ராம கிருஷ்ணன், தவ. பாஞ்சாலன், பொன்.ராமலிங்கம், எம். பரமசிவம், வெ.முத்துக் கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, என். சேட்டு, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து. ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், அ. இளங்குமரன், கே.பி. அய்யப்பன், சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், கே.பி.கே.டி.தங்கமணி, சக்தி ராமசாமி, வே. பொன்துரை, பொன்.கணேசன், அ.முத்து, அரு.வடிவேல், அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், ஆர்.கணேசன், வி.ஆர். இளையராஜா, எஸ்.எம்.சீனியார், கே. எஸ்.ரவி, எல்.குமார், உமுருகேசன், அ. அழகப்பன், கே.சி.சிவக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், ஆ.பழனிக்குமார், பி. அண்ணாத்துரை, ஜெயலெட்சுமி தமிழ்ச் செல்வன், எம்.எம். பாலு, சி.அரங்கநாயகம்,

தவசுமணி, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் செ. குறிஞ்சி வாணன், டாக்டர் சுதர்சன், பொன்.பாரி, தி.முத்து, பாத்திமா பீவி, தேவி, விமலாதி, ராஜா, கே.ஆர்.ராமசாமி, முத்துக் குமார், புத்தாம்பூர் சுப்பையா, டி.எம். ஆர்.ராமமூர்த்தி டி.வளர்மதி, கே.கணபதி, அ.ரெத்தினம், குமரேசன், கருணாகரன், டாக்டர் சுதர்சன், எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், அ.பிரபா, தவசுமணி, மேகநாதன், கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன்,இரா.தமிழ் ராசு, கவிக்குமார்,

நசுருதீன், விளாப்பட்டி சிவா, முகம்மது ரபீக், சே. அருண்குமார், இளையராஜா, அன்சாரி பாஷீத், மு.பி.மணி, மணிமொழி மனோகரன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, வெற்றிச் செல்வன், டாக்டர் சதீஷ், மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, மாலா ராஜேந்திரதுரை, உஷா செல்வம், டி.செல்வம், கை. பழனிச்சாமி, எம்.பி. சரவணன், மழையூர் ராமசாமி, டி.அப்புக்காளை, பழனி தேவா, கனகம்மன் பாபு, டி. சுப்பிரமணியன், வழக்கறிஞர் எம்.செந்தில்குமார், டாக்டர் அமானுல்லா, சுந்தர்ராஜ், தெய்வானை, ராயல் சபா, எம்.டி.ராமசாமி, மு. ராஜதுரை, முல்லை ரமேஷ், செ. ரமேஷ், எம்.கே.அறிவுடை நம்பி, செ.கணேஷ், அரவிந்த், எம்.ரமேஷ், வடவாளம் க.செ.மணிமாறன், அற்புத ஹென்றி, சையது முகம்மது, இனியன், எழில் ராஜா, இதயம் அப்துல்லா, கேஆர்.பாலமுத்து, தட்டாம்பட்டி ஆறுமுகம். என்.ஆர்.பரிமளம், கி.சுப்பிரமணியன், வை. நடராஜன், கா.கைலாசம், பா. ரெங்கராஜ், ஆ மரிய எட்வின், மா.மணிவேலன், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், ஜேம்ஸ், பிரேம் ஆனந்த், திருமயம் ராஜன், ஆலயம் ஆனந்த, ஆர்.எம். சத்யா, விஜயகுமார், கண்மணி சுப்பு, ராமச்சந்திரன், முத்துக்கருப்பன், தனபால், மாலையீடு பிரபு, வாஹித் அலி, இனியன், திலிபன், அப்பாஸ் அலி, ஆலவயல் முரளி சுப்பையா, மற்றும் அணிகளின் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் 5000 க்கும் மேற்பட்டோர். கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

# மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு!

மேட்டூர், ஜூலை 29 -
கர்நாடக, கேரள மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை தீவிர மடைந்து உள்ளதால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி அணைகள் நிரம்பின. இதையடுத்து கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து வினாடிக்கு 1 லட்சத்து 981 கன அடியும், கபினி அணையில் இருந்து வினாடிக்கு 33ஆயிரம் கனஅடியும் என மொத்தம் 1 லட்சத்து 33 ஆயிரத்து 983 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதனால் தர்மபுரி மாவ ட்டம் ஒகேனக்கலுக்கு நீர்வரத்து வினாடிக்கு ஒரு லட்சம் கனஅடியை தாண்டியது. இதனால் காவிரி ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் ஒகேனக்கல் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளை மூழ்கடித்தவாறு தண்ணீர் சீறிப்பாய்ந்து செல்கிறது. இதனால் ஒகேனக்கல்லில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.